மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.

திருமதி ப. சத்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடங்கள் சேதமடைந்துள்ள நிலையில் இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பரிந்துரை செய்திடுமாறு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைத் திரும்பவும் கேட்டுக்கொள்கிறேன். எனவே, பண்ருட்டி மற்றும் புதுப்பேட்டையிலுள்ள அரசு சார்–பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்களைக் கட்டித் தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் மூலமாக மீண்டும் ஆய்வு செய்து, அந்தக் கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியாத நிலையில் இருப்பதாக ஆய்விலே கண்டறியப்பட்டால், கண்டிப்பாக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அய்யா அவர்களிடம் எடுத்துச் சென்று, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

155—

முன்பதிவு மையம்

***52057—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதிக்கு புதிய பேருந்துகள் இயக்கவும், முன்பதிவு மையம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 மார்ச் 21]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2019–2020 ஆம் நிதியாண்டில் வால்பாறை பகுதியில் இயங்கி வந்த பேருந்துகளுக்குப் பதிலாக, 13 புதிய பேருந்துகள் வாகன மாற்றம் செய்யப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது முன்பதிவு மையம் அமைத்திடும் அளவிற்கு பயணிகளின் அடர்வு போதுமானதாக இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களின் இதயங்களிலே என்றும் வீற்றிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எளிமையின் சிகரம், மகராசி வழி வந்த முகராசிக்காரர், அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி 24 ஆம் தேதியை 'மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமாக' அறிவித்த எங்கள் அண்ணன் மாண்புமிகு தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கு என்றும் துணை நிற்கும் தென் பாண்டி சிங்கம், எங்கள் அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் OPS அவர்களையும் வணங்குகிறேன். எந்தத் தேர்தல் வந்தாலும், கோவை என்றும் அம்மா அவர்களின் கோட்டை என்பதை நிரூபித்து, எங்களை வழிநடத்தும் எங்கள் அன்பு சகோதரர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்பு சகோதரர், கழகத்தின் மூத்த முன்னோடி, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அண்ணன் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–55

வால்பாறை மலைப் பகுதியில் ஏற்கெனவே இயங்கி வந்த பேருந்துகளுக்கு மாற்றாக 13 புதிய பேருந்துகளை வழங்கியதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விழாவிற்கு நேரில் வந்து கலந்து கொண்டார்கள். அதற்காக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வால்பாறை மலைப் பகுதியிலிருந்து மதுரை, திருநெல்வேலி, சென்னை போன்ற தொலைதூரப் பகுதிகளுக்குச் செல்ல முன்பதிவு வசதியும், படுக்கை வசதியுடன்கூடிய பேருந்துகளை இயக்கிடவும் அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வால்பாறையிலிருந்து தொலைதூரப் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. மேலும், தற்போது இயக்கப்பட்டுவரும் வால்பாறை—கோவை, வால்பாறை—திருப்பூர் ஆகிய பேருந்துகளில் பயணிகளின் அடர்வும் மிகக் குறைவாக இருப்பதால், முன்பதிவு வசதியை அங்கே ஏற்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, இனிவருங்காலங்களில் பயணிகளின் அடர்விற்கேற்ப அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, புதிய பேருந்துகள் இயக்கப்படுவதைப் பொறுத்தவரையில், காலாவதியான பழைய பேருந்துகளை மாற்றிவிட்டு, புதிய பேருந்துகளை இயக்கிக்கொண்டிருக்கிறோம். இன்னும் புதிய பேருந்துகளுக்கு கூண்டு கட்டிக்கொண்டிருக்கின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் இயக்கக்கூடிய பழைய பேருந்துகளை மாற்றிவிட்டு, புதிய பேருந்துகள் இயக்கப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதிக்கு புதிய பேருந்துகள் இயக்க ஆவன செய்கிறோம் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வால்பாறையிலுள்ள பேருந்து நிலையம் ஆற்றின் ஓரம், தாழ்வான பகுதியில் உள்ளது.

2020 மார்ச் 21]

மழைக் காலங்களில் diesel tank மூழ்கும் அளவிற்குத் தண்ணீர் தேங்கி நிற்கும் நிலை உள்ளது. எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் பத்து இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அங்கு சுற்றுச் சுவர் கட்டியும், மழை வெள்ளத்தால் அது சேதமடைந்துவிட்டது. வால்பாறை, பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகைக்கு எதிர்புறம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 3 ஏக்கர் இடம் உள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி, அதில் 50 சென்ட் இடத்தை நகராட்சிக்கு வழங்கினால், நகராட்சிமூலம் பேருந்து நிலையம் கட்டி சீரமைத்து, பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடமுடியும். எனவே, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான அந்த இடத்தில், 50 சென்ட் இடத்தை வழங்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கூட்டத்தொடரிலேயே எனது கோரிக்கை தொடர்பான அறிவிப்பு வெளியிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை வணக்கத்துடன் கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில், உள்ளாட்சித் துறையின் மூலமாக அந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும். எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]